**முட்டைக் கோசு**

**1.வேர் வீங்கல் நோய்**

வீங்கல் நோயைத் தடுக்க நரற்றுகளை நடுவதற்கு முன் 2 கிராம் கார்பென்டாசிம் ஒரு லிட்டர் தண்ணீர் கலந்த கலவையில் முக்கி நட வேண்டும். செடிகளைச் சுற்றி மேற்கண்ட கலவையை ஊற்ற வேண்டும். பயிர் சுழற்சி முறைகளைக் கடைபிடிக்கவும்.

**2.கறுப்பு அழுகல் நோய்**

இந்நோய் வேர் மற்றும் தண்டுப் பகுதியைத் தாக்குவதால் செடிகள் அழுகி விடும். இதனைக் கட்டுப்படுத்த விதைகளை 100 பிபிஎம் ஸ்ரிடிப்டோமைசின் கலவையில் 30 நிமிடம் ஊற வைத்து பின்னர் விதைக்க வேண்டும்.

**3.இலைப்புள்ளி நோய்**

இந்நோயைக் கட்டுப்படுத்த மான்கோசெப் 2 கிராம் அல்லது கார்பென்டாசிம் 1 கிராமை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

வெள்ளரி

**1.நாற்றழுகல் நோய்**

- தேவையான அளவு இயற்கை உரங்களை இடுதல்
- சூடோமோனஸ் பாக்டீரியாவை (10 கிராம்/கிலோ) அல்லது எண்டிரோபாக்டரை விதையுடன் கலந்து விதைத்தல்

**2.வாடல் நோய்**

- கிளையோகிலேடியம் பூசணத்தை மண்ணில் தூவுதல்
- இயற்கை உரங்களை மிகுதியாக இடுதல்

**3.சாம்பல் நோய்**

- நோய் தாக்கிய இலைகளை அகற்றி அழித்தல்
- போரிக் அமிலம் (0.005 M), மாங்கனிஸ் குளோரைடு அல்லது பொட்டாசியம் பாஸ்பேட் ($K_2HPO_4$ / 0.001%) இவற்றில் ஏதாவது ஒன்றை இலைகளின் மேல் தெளித்து செடிகளின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்தல்.

**4.ஆந்த்ரக்னேரஸ் இலைப் புள்ளி நோய்**

- நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் ஆக்டிகார்டை (50 மி.கிராம்/லிட்டர்) இலைகளின் மேல் தெளித்தல்.

**5.தேமல் நோய்கள்**

- எல்லாவிதமான களைச் செடிகளையும் விடுபட்ட பூசணி வகைச் செடிகளையும் அகற்றி அழித்தல்.
- பயிர் சுழற்சி முறையை பயன்படுத்துதல்
- சோளம், கம்பு, சூரியகாந்தி போன்றவற்றை தடுப்புப் பயிராக பயன்படுத்துதல்.
- நோயற்ற விதைகளை கவனமாக தேர்வு செய்து விதைத்தல்.